வாரியபொல பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வாரியபொல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வாரியபொல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சொத்துக்களின் இருப்பு, ஆயுட்காலம், பெறுமதி, சொத்துக்களின் தன்மை போன்ற விடயங்களின் அடிப்படையில் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் நுகர்வுப் பொருளாக இனங்காணக் கூடிய நுகர்வுப் பொருட்கள் நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம்.	சரியாக கணக்கீட்டுக் கொள்கையை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	முன்னைய ஆண்டிற்குரிய மீளளிப்புச் செய்யப்படாத சம்பள ஏற்பாடு ரூபா 164,480 மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக நடைமுறைச் சொத்துக்களின் மீதி அப்பெறுமானத்தால் குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	கட்டுப்பொத்த பல்நோக்கு கட்டிடத்தில் நூலகம் ஸ்தாபிப்பதற்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 541,518 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை.	2025 இன் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மூலதன செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(இ)	ஹெட்டிகெதர முன்பள்ளிப் பாடசாலை மற்றும் கொஹானேகம முன்பள்ளிப் பாடசாலை என்ற காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாது உள்ளதுடன் அந்த சொத்துக்களுக்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 879,800 செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மூலதன செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டில் வேலைக் கடன் கொடுத்தோர் பட்டோலையின் பிரகாரம் மீதி ரூபா 73,786,192 ஆக இருந்த போதும் அது ரூபா 73,149,687 ஆக ரூபா 636,505 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	பொதுப் பேரேட்டை சமப்படுத்தும் போது ஏற்பட்ட தவறாக இருந்ததை தயவுடன் அறியத் தருவதுடன் 2025 இன் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாகக் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டின் கடன் கொடுத்தோருக்கான கொடுப்பனவு செலவினப் பதிவேட்டின் படி ரூபா 56,764,440 ஆக இருந்த போதும் அது ரூபா 60,617,203 ஆக ரூபா ரூபா 3,852,763 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	பொதுப் பேரேட்டில் செலவினக் குறிப்பிற்காக பி.ச 13, 14 அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. பி.ச 13, 14 தயாரிப்பதற்காக அக் கொடுப்பனவு காசேடு அடிப்படையாகக் கொள்ளப்பட்டதுடன் மாதாந்த வருமான செலவினம் பி.ச அறிக்கை 10 பிரதான காசேட்டுக்கு சமப்படுத்தியமையால் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது.	சரியாகக் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டில் பாதீட்டு முன்மொழிவின் மூலம் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட எனினும் அமுல்படுத்தப்படாத 06 செயற்திட்டங்களுக்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 1,126,474	ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்காது இருந்தமையால் அமுல்படுத்தப்படவில்லை.	கொடுக்கல் வாங்கல்கள் ஏற்பட்ட பின்னர் கணக்கீடு செய்யப்படல்

	கடன்கொடுத்தோர் ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.		வேண்டும்.
(எ)	முன்னைய ஆண்டின் வேலைக் கடன்பட்டோரில் காணப்பட்ட மீளாய்வாண்டின் போதும் அறவிடப்படாத ரூபா 682,570 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மீதியில் கைவிடப்பட்டிருந்தது.	தவறொன்றினால் 2023 ஆம் ஆண்டின் கணக்கில் உள்ளடக்கப்பட்ட போதும் 2024 ஆம் ஆண்டின் கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்படவில்லை.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஏ)	கடன்கொடுத்தோராக சரியாக குறிப்பிடப்படாமல் 2023 ஆம் ஆண்டில் 08 வேலைகளுக்காக ரூபா 2,174,656 தொகையும், 2022 ஆம் ஆண்டில் 02 வேலைகளுக்காக ரூபா 17,448,358 தொகையும் ஆக கூட்டு மொத்தமாக ரூபா 19,623,014 நிறைவேற்றப்படாத 10 வேலைகள் கடன்கொடுத்தோர் ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2015 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது குறித்துரைத்தவாறு இனங்காணப்பட்ட கடன் கொடுத்தோர் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஏற்பட்ட தவறும் 2025 இன் நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வேலைக் கடன் கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்			
	134 ஆம் பிரிவு	உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக ஆகக் கூடிய ஆதனவரி அளவினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சட்டங்கள், விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமானக் கோவை			
	நிதிப்பிரமாணம் 571	பெறுமதி ரூபா 499,527 ஆன 02 வருட காலத்தை விஞ்சிய 43 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை	நிதிக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று அந்த பணத்தை சபையின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு தேவையான நடவடிக்கை	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எடுக்கப்படுகின்றது.	
(இ)	1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) 218 ஆம் விதி	வருடாந்தம் காணி, கட்டிடங்களை உள்ளடக்கிய நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை.	கணக்காய்வு சந்தரப்பம் வரையில் காணி மற்றும் கட்டிடங்களை உள்ளடக்கிய நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்படுவதுடன் அதனை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 153,859,740 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 13,317,548 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000
i.	ஆதன வரியும் வரியும்	12,110	10,066	6,243	3,822	10,423	9,128	6,873	2,254
ii.	வாடகை	26,653	16,915	16,733	182	31,462	13,344	13,204	140
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	2,253	395	393	2	2,205	2,348	2,348	0
iv.	ஏனைய வருமானம்	123,865	208,967	40,832	168,134	134,540	50,656	131,158	0
		----------	--------	--------	--------	-------	--------	----------	---------
	மொத்தம்	164,881	236,343	64,201	172,140	178,630	75,476	153,583	2,394
		===\===	==\===	=\=====	==\====	=====	=======	======	=====

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 236.34 மில்லியன் ஆக இருந்த போதிலும் கடந்த ஆண்டின் நிலுவை வருமானமும் உள்ளடங்கி சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 64.2 மில்லியன் ஆனதன் காரணமாக ரூபா 172.1 மில்லியன் நிலுவை மீதி ஒன்று மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டி இருந்தது.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா 164.8 மில்லியன் ஆக இருந்த போதும் ரூபா 236.3 மில்லியன் சிட்டையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தினை விட 71.5 மில்லியன் அதாவது 43 சதவீதம் அதிகரித்து சிட்டையிடப்பட்டிருந்தது.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	பொருத்தமான அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	**வீத வரியும் வரியும்**		
(i)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த ஆதனவரி நிலுவை மீதியான ரூபா 3,947,226 தொகையில் 54 சதவீதம் 2023 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற நிலுவை மீதியாக இருந்ததுடன் அந்த நிலுவை ஆதனவரியினை அறவிடுதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஆண்டின் போது நிலுவை வருமானம் 2024 இல் சேகரிப்பதற்காக நடமாடும் நிகழச்சித் திட்டங்கள் மற்றும் ஆதனங்களைத் தடைசெய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படும்.	நிலுவை ஆதனவரியை அறவிடுதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	சபை ஆதனவரி அறவிடுகின்ற மொத்த ஆதனவரி அலகுகளின் எண்ணிக்கை 4698 ஆக இருந்ததுடன் 1782 அலகுகளில் நிலுவை ஆதன வரி செலுத்த வேண்டியிருந்தது.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	நிலுவை மீதிகளை விரைவாக அறவிடல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்கான உபவிதிகள் விதிக்க முடியுமாக இருந்த போதும் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 01 விடயங்கள் தொடர்பாக உபவிதி விதிக்கப்பட்டிருந்தது. அதனை முறையான பிரகாரம் அங்கீகரித்து வரித்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்ததா என்பது தொடர்பான உறுதிப்படுத்தலும் சபையிடம் காணப்படவில்லை.	தேவையின் பிரகாரம் எதிர்காலத்தில் உபவிதிகளை விதித்துத் கொள்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	சபையின் நடவடிக்கைகளை மேவகை செய்யும் வகையில் உபவிதிகள் விதித்து அமுல்படுத்தப்படல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	05 வருடங்களை விட பழைய ரூபா 738,444 நிலுவை வாடகை மீதியை அறவிடுவதற்கு மற்றும் ரூபா 1,677,345 ஆன 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஒரு வருடத்தை விஞ்சிய கேள்வி வைப்புக்கள் மற்றும் 05 உடன்படிக்கை வைப்புக்களை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கும் பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபையினால் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்ட கட்டிட விண்ணப்பங்கள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததா என கண்டறிவதற்கான பொருத்தமான வேலைத் திட்டம் ஒன்று தயாரித்து அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	நிராகரிக்கப்பட்ட கட்டிட விண்ணப்பங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.	பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு செயற்பாடுகளை முறைமைப்படுத்துதல் வேண்டும்.
(இ)	சபைக்குச் சொந்தமான உயிரியல் வாயு அலகு 2021 ஆம் ஆண்டின் பின்னர் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றமையும் அந்த அலகை பழுதுபார்த்து ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்காக சபை கவனம் செலுத்தாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.	உயிரியல் வாயு பிரிவை மறுசீரமைப்பதற்காக பயிற்சி உத்தியோகத்தர்களின் உதவி தேவையாக இருந்ததுடன் அதற்காக உள்ளூராட்சி திணைக்களத்திடம் எழுத்து உதவி கோரப்பட்டுள்ளது.	சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும்.

3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ரூபா 5,310,070 செலவினம் செய்து பூர்த்தி செய்யப்பட்டிருந்த பாதணிய கிமன்ஹல இல் 08 கடைகள், கொங்கிரீட் உற்பத்தி செயற்திட்டத்தின் உபகரணங்கள், கட்டுப்பொத்த பல்நோக்கு கட்டிடத்தின் கடைகள் மற்றும் வாரிய பொல பதிய பொதுச் சந்தை கட்டிடத் தொகுதி போன்ற சொத்துக்கள் மீளாய்வாண்டு வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.	தற்போது கட்டுப்பொத்த பல்நோக்கு கட்டிடத்தில கடைகள் கேள்வி கோரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் கொங்கிரீட் உற்பத்தி செயற்திட்டத்தின் உபகரணங்கள் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றமையால் ஏலத்தில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	சொத்துக்கள் ஆக்கபூர்வமானதாக பயன்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	காணி ஒன்றில் சபையினால் கடைகள் நிர்மானிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை ரூபா 916,689 வாடகை செலுத்தப்பட்டிருந்தது.	பாதெணிய கிமன்ஹல, அநுராதபுரத்திற்கு பாதயாத்திரை செல்கின்ற யாத்திரிகளுக்கு ஓய்வு எடுக்கும் நிலையம் ஒன்றாக நிர்மாணிக்கப்பட்டதுடன் 10 வருட காலத்திற்கு வாடகை உடன்படிக்கையின் அடிப்படையில் உடள்படிக்கை செய்து அதன் நிர்மான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நகர மத்தியில் அதற்கு பொருத்தமாக காணி ஒன்று காணப்படாமையினால் பாதனிய ரஜமஹா விகாரைக்குரிய இந்த காணி தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.	காணியின் உரித்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்குச் செந்தமான காணியை முறையான பிரகாரம் மெய்மையாய்வு செய்து காணி மற்றும் கட்டிடங்களை இனங்காண்பதற்கும், அவற்றின் பௌதீக இருப்பினை உறுதிப்படுத்தும் வகையில் வேலி எல்லையினை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	சபைக்குச் செந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.	சொத்துக்களின் பாதுகாப்பை உரிய பிரகாரம் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	சபைக்குரிய காணி, கட்டிடம் மற்றும் மயான நிலங்களில் 143 அலகுகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இந்த காணி மற்றும் கட்டங்களைக் கையேற்பதற்காக பிரதேச செயலகத்திற்கு கோரிக்கை மேற்கொள்ளப்பட்டு அவ்வப்போது நினைவூட்டல்களும் கையளிக்கப்பட்ட போதும் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	சொத்துக்களின் உரித்து சபைக்கு கையளிக்கப்படல் வேண்டும்.
(இ)	சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பொதுக் கிணறுகளின் எண்ணிக்கை 329 ஆக இருந்த போதும் சபைக்கு உரிமைத் தன்மை கையளிக்கப்பட்ட பொதுக் கிணறுகளின் எண்ணிக்கை 85 மாத்திரம் ஆகும்.	பொதுக் கிணறுகளின் உரித்தைக் கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	சொத்துக்களின் உரித்து சபைக்கு கையேற்கப்படல் வேண்டும்.

3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
கூட்டுப் பெறுமதி ரூபா 32 மில்லியன் ஆன 08 நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை.	வேலைகளில் இதுவரையில் 02 ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 04 வேலைகள் ஆரம்பிக்கப்பட வில்லை.	இந்த வேலைகளை விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)(i)	சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி 54 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அதில் உள்ளடங்கியிருந்த அமைய, பதிலீட்டு, ஒப்பந்த அல்லது நாளாந்தப் படி அடிப்படையின் கீழ் சேர்க்கப்பட்ட 15 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,140,150 செலுத்தப்பட்டிருந்தது.	உள்ளூராட்சித் திணைக்களத்தின் பதவியணிக்கு உரிய இந்த நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 37 ஆகும். அரச நிர்வாக சுற்றறிக்கை 25/2014 இன் கீழ் ஆட்சேர்ப்புக்கள் இன்னும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்படாத பதவிகளின் எண்ணிக்கை 17 ஆகும். அதன் பிரகாரம் மொத்த மிகை 54 ஆகும்.	ஊழியர் தேவையின் பிரகாரம் அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளுதல் வேண்டும்.
(ii)	அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இன் கீழ் ஆட்சேர்க்கப்பட்டு குறித்த வேலைகளுக்குரிய கடமைகளில் நியமிக்கப்படாமல் அலுவலக	அரச நிர்வாக சுற்றறிக்கை 25/2014 இன் கீழ் சேர்க்கப்பட்ட 05 ஊழியர்கள் சேவைத் தேவையின் அடிப்படையில் அவர்களின் தகைமைகள் மற்றும் அனுபவத்தை	சேவைத் தேவையின் பிரகாரம் அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளுதல்

கடமைகளில் 05 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி 22 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.	கவனத்தில் கொண்டு அலுவலக நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதுடன் சுற்றறிக்கையின் கீழ் சேர்க்கப்பட்ட ஊழியர்கள் யாவரும் தற்போது நிரந்தமைாக்கப்பட்டுள்ளனர்.	வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
04 வருமான விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கு இடையே 15 சதவீதம் முதல் 160 சதவீதம் வரையிலான முரண்களும், 07 செலவின விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கு இடையே 20 சதவீதம் முதல் 221 சதவீதம் வரையிலான முரண்களும் காணப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.	எதிர்காலத்தில் மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது இந்த காரணங்களைக் கவனத்தில் கொண்டு பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பொருத்தமான அடிப்படையில் மதிப்பீடு தயாரித்து அமுல்படுத்தப்படல் வேண்டும்.